**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**GOP.No.144/2023**

Date: 03.11.2023

PW1 – குறுக்கு விசாரணை

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

நான் பி.ஏ ஆங்கிலம் படித்திருக்கிறேன். தற்போது தொலைவழியில் பி.எட் படித்துக்கொண்டிருக்கிறேன். நான் தற்போது எந்த வேலைக்கும் போகவில்லை. நான் தற்போது எனது தகப்பனார் வீட்டில் வசித்து வருகிறேன். அது என் தகப்பனாரின் சொந்த வீடாகும். அந்த வீடு என் தகப்பனாருக்கு சொந்தமானது என்று நிரூபிக்கும் வகையில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணமானது விவாகரத்தில் முடிந்துவிட்டது என்றால் சரிதான். நாமக்கல் குடும்ப நல நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட விவாகரத்து உத்தரவானது என் தரப்பில் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவில் எனது குழந்தைகள் என்னுடன்தான் இருக்கவேண்டும் என்று உத்தரவிடப்படவில்லை என்றால் சரிதான்.

என்னுடைய நகைகளை எனது கணவர் பெற்று அவற்றை வங்கியில் அடமாணம் வைத்துவிட்டார் என்று நான் சொல்லும் கூற்றை நிரூபணம் செய்யும் வகையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதற்கான ரசீது என்னிடம் இல்லை. நான் மோகனூர் காவல் நிலையத்தில் 10.06.2023 மற்றும் 15.06.2023 ஆகிய தேதிகளில் கொடுத்த புகாரில் தற்போதைய நிலை என்ன என்ற கேள்வி பலமுறை சாட்சிக்கு விளக்கி சொல்லப்பட்டும் சாட்சி அக்கேள்விக்கு நேரடியாக பதில் அளிக்கவில்லை.

நான் கொடுத்த புகார்களானது உண்மையாக இருந்திருந்தால் அந்த புகார்களின் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றாலும் அவை பொய்

புகார்கள் என்பதால்தான் அவற்றின் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**சாட்சியினுடைய குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது**.

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.